தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **CP.No.** | **:** | 79/2019 | சாட்சியம் | **:** | **RW1** |
| **Name** | **:** | திரு.**முரளி** | | | |
| **Date** | **:** | **13.05.2025.** | | | |
| **Time** | **:** | **10.56 a.m to11.23 a.m** | | | |

எ.த.சா.**1** திரு.**முரளி** என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை தொடர்ச்சி

இந்த வழக்கில் இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் 19.12.2019 அன்று வக்காலத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வக்காலத்து தாக்கல் செய்த அன்று பதிலுரை தாக்கல் செய்யப்பட்டதா என்றால் தெரியாது. IBA.No.1237/2019 வழக்கு பற்றி எப்போது தெரிய வந்தது என்றால் 04.06.2021 அன்று உத்தரவு கிடைக்கப்பெற்றது அப்போது தெரியவந்தது. அந்த சமயத்தில் மனுதாரர் தாக்கல் செய்த ID, CP பற்றி எங்களுக்கு தெரிந்திருந்தது என்றால் சரியல்ல. IBA.No.1237/2019 வழக்கில் இந்த CP வழக்கு பற்றி சொல்லப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. முதல் எதிர்மனுதாரர் நொடிந்த நிலைக்கு போய் விட்டார் என காட்ட அதற்கான உத்தரவு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எ.சா.ஆ.2,3 விளம்பரம் எந்த தேதியில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் 13.06.2021 அன்று கொடுக்கப்பட்டுள்ளது. 13.06.2021 அன்று மனுதாரருக்கு ID யில் உத்தரவு பெற்று CP தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் இல்லை. நீதிமன்ற

உத்தரவு முன்னிலைக்கு மனுதாரருக்கு கிடைக்க வேண்டிய உத்தரவை மறைத்து முதல் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரர் IBA வழக்கில் உத்தரவு பெற்றுள்ளோம் என்றால் இல்லை. உத்தரவு முன்னிலைக்கு தொகை வழங்க கேட்டு மனுதாரர் மனு தாக்கல் செய்த பின்னரும் கூட அந்த தொகை அவருக்கு கொடுக்க நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் இல்லை. 22.03.2023 அன்று உத்தரவு வந்த பின்னர் முதல் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரர் நிறுவனங்கள் ஐக்கியம் ஆகின. வக்காலத்து தாக்கல் செய்த பின்னர் வழக்கு விவரங்களை வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வழக்கறிஞர் மூலம் வழக்கு விவரத்தை தெரிந்து கொண்டதாக சொல்லி விட்டு அனைத்து கேள்விகளுக்கும் தெரியாது என பதில் அளிக்கும் காரணத்தினால் நான் சாட்சியம் அளிக்க தகுதியற்றவர் என்றாலும் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைகக்தக்கது என்றால் இல்லை. மனுதாரர் கோரியுள்ள தொகை அவருக்கு கொடுக்க கடமைபட்டுள்ளோம் என்றாலும் மனுப்படி உத்தரவாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

S SUJATHA

Presiding Officer, Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2025.05.20 17:17:05 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:13.05.2025.